# பெரியகல்லாறு கோயில்களில் வழங்கப்படும் சடங்குப் பாடல்கள்

செல்வி. பிறசாந்தினி நாகேந்திரராசா

பதிவிலக்கம்: EU/IS/2008/AC/218

சுட்டிலக்கம்: CS 3618

295

EASTERN UNIVERSITY SRI LANKA
PER ARDUA AD SCIENTIAM

LIBRARY
06 MAR 2015
EASTERN UNIVERSITY

FAC295
Project Report
Library - EUSL

மொழித்துறை,
கலை கலாசாரபீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
வந்தாறுமூலை,
இலங்கை.

2014

PROCESSED
Main Library, EUSL

# பெரியகல்லாறு கோயில்களில் வழங்கப்படும் சடங்குப் பாடல்கள்

## உள்ளடக்கம்


உறுதியுரை

முகவுரை

நன்றியுரை

**01. அத்தியாயம் ஒன்று**

1.0 ஆய்வு அறிமுகம் 02-08

1.1 ஆய்வுத் தலைப்பு

1.2 ஆய்வுப் பிரதேசம்

1.3 ஆய்வுப் பிரதேச அறிமுகம்

1.4 ஆய்வு நோக்கங்கள்

1.5 ஆய்வுப் பிரச்சினைகள்

1.6 இலக்கிய மீளாய்வு

1.7 ஆய்வு மூலங்கள்

1.7.1 முதல் நிலைத் தரவுகள்

1.7.2 இரண்டாம் நிலைத் தரவுகள்

1.8 ஆய்வு அமைப்பு

**02. அத்தியாயம் இரண்டு**

2.0 சடங்குக் கோயில்கள்: அறிமுகம் 10-18

2.1 மட்டக்களப்பில் தெய்வங்கள்: அறிமுகம்

2.2 பெரிய கல்லாறின் சடங்குக் கோயில்கள்: அறிமுகம்

2.2.1 கடனாச்சி அம்மன் கோயில் வரலாறு

2.2.2 காளி அம்மன் கோயில் வரலாறு

2.2.3 வதனமார் கோயில் வரலாறு

**03. அத்தியாயம் மூன்று**

3.0 பெரியகல்லாறுக் கோயில்களின் சடங்குமுறைகளும் பாடல்களும் 20-32

3.1 சடங்கு முறைகளும் பாடல்களும் ஓர் அறிமுகம்

3.1.1 கடனாட்சி அம்மன் சடங்குமுறைகளும் பாடல்களும்

3.1.2 காளி அம்மன் சடங்கு முறைகளும் பாடல்களும்

3.1.3 வதனமார் சடங்கு முறைகளும் பாடல்களும்

## 04. அத்தியாயம் நான்கு

4.0 சடங்குப் பாடல்கள் வெளிப்படுத்தும் விடயங்கள் 33-51

4.1 கோயில்கள் பற்றிய வரலாற்றுச் செய்திகள்

4.2 புராண இதிகாசச் செய்திகள்

4.3 மக்களின் மன உணர்வு

4.4 மரபுகளும் நம்பிக்கைகளும்

4.5 கலைகள் பற்றிய செய்திகள்

## 05. அத்தியாயம் ஐந்து

5.0 சடங்குப்பாடல்களில் காணப்படும் அழகியல் அம்சங்கள் 53-63

5.1 இசை வாய்ப்பாடு

5.2 நயந்துரைத்தல்

5.2.1 கற்பனை ஆற்றல்

5.2.2 வர்ணனை பயன்பாடு

5.2.3 அணிக் கையாளுகை

5.3 சொல்லாட்சி முறை

## 06. அத்தியாயம் ஆறு

நிறைவுரை 65-67

## துணை நூற்பட்டியல்

## பின்னிணைப்புக்கள்

**01.** சடங்குப் பாடல்கள் 71-105

**02.** சடங்கு சார் புகைப்படங்கள்

# முகவுரை

சமூகக்கட்டமைப்பில் இனக்குழுக்களாக ஒருங்கிணைக்கப்பெற்றுள்ள பல குழுவினரும் தங்களுக்கென தனித்த பண்பாட்டுப் பழக்கவழக்கங்களை கொண்டுள்ளனர். தனித்த அடையாளங்களைக் கொண்ட ஒரு குழுவினரின் வாழ்க்கையை வெளிப்படுத்துவதாகவே பண்பாடு அமைகின்றது. உலகளாவிய நிலையிலே ஒவ்வொரு நாட்டினரும் தத்தம் பண்பாடுகளையும், பாரம்பரியங்களையும் ஆராய்ந்து நிறுவுவதில் இன்றும் முனைப்பாக செயற்பட்டு வருகின்றனர். புழமை பேணலும் புதுமை காணலும் முனைப்படைந்து வரும் இக்காலகட்டத்தில் நாட்டார் வழக்கியல் ஆய்வுத்துறையும் இப் பின்னணியில் முக்கியத்துவம் பெறுகின்றது.

ஒரு நாட்டினரது பாரம்பரியமான கலை, கலாசார விடயங்களைப் பேணி ஆராயும் துறையாக நாட்டார் வழக்கியல் ஆய்வு நெறி காணப்படுகின்றது. இத்தகைய சிறப்பு வாய்ந்த நாட்டார் வழக்கியல் துறையிலே உலகமயமாதல், நவீனமயமாதல், திறந்த பொருளாதார கொள்கை, நவீன கல்வி முறைமை, பிற சமய தாக்கம், பழமை போற்றாத பண்பு, பிறபண்பாட்டு ஊடாட்டம், ஊடக ஆதிக்கம் மற்றும் இவை போன்ற பல்வேறு காரணிகளால் நாட்டார் வழக்காற்று வகைமைகள் யாவும் இன்று வேகமாக வழக்கிறந்து வருகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும். எவ்வாறு இருந்த போதிலும் மக்களுடைய பண்பாடுகளின் நிமித்தம் நாட்டார் இலக்கியங்களில் சில அன்று தொட்டு இன்று வரை அவர்களிடையே பயில் நிலையில் இருந்தும் வருகின்றன. எடுத்துக்காட்டாக கோயில்களில் பாடப்படும் சடங்குப் பாடல்களைக் கூறலாம்.

மக்களுடைய பண்பாட்டின் நிமித்தம் இன்றும் அவர்களிடையே பயில் நிலையில் இருந்து வரும் இச் சடங்குப் பாடல்கள் மக்களுடைய கலை, கலாசாரங்களை எடுத்து கூறுவதாகவும் காணப்படுகின்றது. மட்டக்களப்பு மாவட்டத்தை பொறுத்த வரையில் இத்தகைய சிறப்பு வாய்ந்தாகக் காணப்படும் சடங்கு பாடல்கள் பற்றிய ஆய்வில் நாட்டார் இலக்கியங்கள் பற்றி ஆய்வு செய்பவர்கள் அதிக கவனம் செலுத்தியதாக தெரியவில்லை. இதன் நிமித்தம் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள பெரியகல்லாறு பிரதேசத்தில் வழங்கப்படும் சடங்குப் பாடல்களினூடாக இப் பிரதேச மக்களுடைய கலை, கலாசாரங்களையும் இப் பாடல்களை கட்டும் புலவனது கற்பனை ஆற்றல்களையும் ஆராய்வதை நோக்கமாகக் கொண்டு ‘‘பெரியகல்லாறு கோயில்களில் வழங்கப்படும் சடங்குப் பாடல்கள்’’ எனும் தலைப்பில் இவ் ஆய்வுக்கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.